# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்
## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No. 3575/2020

| | |
|---|---|
| **சாட்சியின் வரிசை எண்** | மசா1 |
| **பெயர்** | ஏகாம்பரம் |
| **க/த.பெயர்** | முருகேசன் |
| **வயது** | 56 |
| **விலாசம்** | செய்யூர்,காஞ்சிபுரம் |
| **தொழில்** | வியாபாரம் |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 25.09.2025 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் முதல் மனுதாரர் ஆவேன். வாகன விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இதில் என்னை எனது தரப்பில் முதல் சாட்சியாக விசாரித்து கொண்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். இதில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துக்கொள்ள வேண்டுகிறேன். மேல்மருத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையின் விபத்து பதிவறிக்கை மசாஆ 1, மேல்மருத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையின் 19.12.2017 அன்று சிகிச்சை பெற்றதற்கான

புறநோயாளி நோட்டு மசாஆ2, மேல்வலம்பேட்டையிலுள்ள வசம் மருத்துவமனையில் 24.12.2017 அன்று வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவரின் குறிப்பு சீட்டு மசாஆ3, முதல் தகவல் அறிக்கை மசாஆ4, விபத்து குறித்த வரைபடம் மசாஆ5, குற்ற அறிக்கை மசாஆ6, இறுதி அறிக்கை மசாஆ7, விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு சான்றிதழ் மசாஆ 8, விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீட்டு ரசீது மசாஆ9, விபத்து ஏற்படுத்திய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் மசாஆ10, விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மசாஆ11, மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மசாஆ 12, மனுதாரரின் ஆதார் அட்டை நகல் மசாஆ13. மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல் மசாஆ14.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் தான் வாகனத்தை ஓட்டினேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது ஓட்டுநர் உரிமத்தை மதுராந்தகம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பெற்றேன். ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் திண்டிவனத்தில் இருந்து மதுராந்தகம் செல்லும் போது கார் என் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டவுடன் மேல்மருவத்தூர் மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர் வாசம் மருத்துவமனைக்கு சென்றேன். தொடர் சிகிச்சைக்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் வருமானம் குறித்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. தேங்கய் வியாபாரம் செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வருமானத்தை குறித்து வங்கி கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்யவில்லை. நான் விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு மீண்டு வந்த காரணத்தால் நான் மனுவில் கேட்டுள்ள இழப்பீடானது அதிகம் என்றாலும் இந்த விபத்து என்

**கவணக்குறைவால் ஏற்பட்டது என்றாலும் எதிர்மனுதாரர்கள் எந்த வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர்கள் கிடையாது என்றாலும் சரியல்ல.**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது,

**5 வது நீதிபதி**

**சென்னை**